# குளித்தலை நகராட்சி

30.04.2018.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு அரசு நிதி (படிகள்) துறை, அரசு ஆணை எண்.123, நாள்–11.04.2018.ன்படி அகவிலைப்படி 5%–லிருந்து 7% ஆகவும், அரசு ஆணை எண்.125, நாள்–11.04.2018.ன்படி அகவிலைப்படி 139%–லிருந்து 142% ஆகவும் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1195/2018/சி1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் மார்ச்–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்–2018.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 04. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN-47-E-0264.ன் 2017–2018.ஆம் ஆண்டிற்கான சாலைவரி ரூ.5055/– செலுத்தவேண்டி உள்ளது. மேற்படி தொகையினை வங்கி வரைவோலை மற்றும் ரொக்கமாக வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் உரிய தலைப்புகளில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று தொகையினை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.863/2018/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சியில் 24 வார்டுகளிலும் 7627 சொத்துவரி விதிப்புகள் உள்ளது. இவற்றில் 2031 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு உள்ளது. மீதம் 5596 வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க வேண்டியுள்ளது. பயனாளிகள் 5500 நபர்கள் போதிய நிதி நிலைமை இல்லாத காரணமாக, குடிநீர் குழாய் இணைப்புபெற இயலாதநிலையில் உள்ளனர். எனவே, புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் 5500 எண்ணிக்கை மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.330.00 லட்சம் ஆகும். அதற்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரி பெறலாம். மேற்படி மதிப்பீட்டு தொகைக்கான செலவினத்தினை அரசு மான்யமாகவோ அல்லது தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) வட்டியில்லா கடன் பெற்று பணி மேற்கொள்ள் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கிய பிறகு, இணைப்பு கட்டணம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றை 4 தவணைகளில் வசூல் செய்துகொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலமாக வட்டியில்லா கடனாகவோ அல்லது அரசு மான்யம் பெற்றோ பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
2). நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிபெற திட்ட பிரேரணைகள் சமர்ப்பித்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2884/2017/இ1)

பொருள்– 06. இந்நகராட்சி பேருந்து நிலைய 20 கடைகள் மற்றும் பழைய மார்க்கெட்தெரு 8 கடைகள் ஒன்பது ஆண்டுகள் 31.03.2018–உடன் முடிவடைந்ததால், கீழ்க்கண்டபடி 01.04.2018 முதல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறைகள் நக.எண்.4162/2016/அ4, நாள்–06.04.2018.ன்படி கண்காணிப்புக்குழுவால் வாடகை மறுநிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**பேருந்து நிலைய கடைகளுக்கான அடிமனைக்கு தற்போது நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விபரம்.**

| | | ஒரு மாதம் வாடகை |
|---|---|---|
| 1) | சைவ உணவு விடுதி | ரூ. 4000/– |
| 2) | அசைவ உணவு விடுதி | ரூ. 4000/– |
| 3) | பெட்டிக்கடை எண்.1 | ரூ. 2000/– |
| 4) | பெட்டிக்கடை எண்.2 | ரூ. 2900/– |
| 5) | வாழைஇலைக்கடை | ரூ. 2000/– |
| 6) | பேக்கரி ஸ்டால் | ரூ. 3300/– |
| 7) | பூக்கடை எண்.1 | ரூ. 2500/– |
| 8) | பூக்கடை எண்.2 | ரூ. 2000/– |
| 9) | ஸ்வீட் ஸ்டால் | ரூ. 2500/– |
| 10) | பொரி விற்பனைக்கடை | ரூ. 2000/– |
| 11) | பழக்கடை | ரூ. 2500/– |
| 12) | மிதிவண்டி கடை எண்.1 | ரூ. 3000/– |
| 13) | ஜெனரல் மெர்ச்சன்ட் ஸ்டேசனரி விற்பனை பொருள் | ரூ. 2000/– |
| 14) | முறுக்குக்கடை | ரூ. 1500/– |
| 15) | மிதிவண்டி கடை எண்.2 | ரூ. 2000/– |
| 16) | முடிதிருத்தும் கடை | ரூ. 2700/– |
| 17) | மிதியடிக்கடை | ரூ. 2000/– |
| 18) | பேப்பர் மற்றும் புத்தகக்கடை | ரூ. 2500/– |
| 19) | பூக்கடை எண்.3 | ரூ. 2000/– |
| 20) | ஒலி, ஒளி, வீடியோ, ஆடியோ விளம்பரம் | ரூ. 2000/– |

**பழைய மார்க்கட்தெரு கடைகள்**

| வ. எண். | ஒருமாத வாடகை |
|---|---|
| 1) | ரூ. 700/– |
| 2) | ரூ. 700/– |
| 3) | ரூ. 700/– |
| 4) | ரூ. 700/– |

| வ. எண். | ஒருமாத வாடகை |
|---|---|
| 5) | ரூ. 700/– |
| 17) | ரூ. 700/– |
| 18) | ரூ. 700/– |
| 23) | ரூ. 700/– |

அலுவலக குறிப்பு– மன்றம் ஒப்புதல் செய்யலாம்.
(ந.க.எண்.47/2018/அ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியின் 2016–2017.ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.85,758/–ஐ அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் என 2017–2018.ஆம் ஆண்டு தணிக்கை குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாணை எண்.65, உள்ளாட்சித்துறை நாள்–17.01.94.ன்படி தணிக்கைக்கான உண்மையான செலவில் தொகையாக ரூ.85,758/–ஐ, அரசு தலைப்பில் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியத்தை முன்னிட்டு தொகை செலுத்தியதை அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1057/2018/பி1)

*******

# குளித்தலை நகராட்சி

30.04.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 87 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 88 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 89 | பதிவு செய்யப்பட்டது. |
| 4 | 4 | 90 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 91 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 92 | ஒப்புதல் செய்யப்பட்டது. |
| 7 | 7 | 93 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.